**+2 வணிகவியல் 2ஆம் இடைப்பருவத் தேர்வு நவ -24**

1.(ஈ) அனைத்தும்
2.(இ) 3
3.(ஆ) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி
4.(அ) 1960
5.(இ) உலகமயமாக்கல்
6.(அ) 3 மாதங்கள்
7.(ஈ) அனைத்தும்
8.(இ) ஊழியர்
9.(அ) i ii iii iv v
10 (அ) A மற்றும் R சரியானது மேலும் R என்பது A யிற்கான சரியான விளக்கம்

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X2=10**

11. **குறை தீர்ப்பு**: என்பது தவறான விளம்பரங்கள், தரம் குறைந்த பொருட்கள், எடை குறைபாடு மற்றும் அதிகபடியான செலவுகள் ஆகியவற்றின் மூலம் நுகர்வோர் சுரண்டப்படுவதற்கு தீர்வு காண்பதாகும்.

12. **VUCA – ஐ விவரி** விரைவான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக வணிகத்தின் எதிர்கால சூழலை சுருக்கமாக ஏற்ற இறக்கம், நிச்சயமற்ற தன்மை சிக்கலான தன்மை மற்றும் தெளிவற்றத் தன்மை கொண்டவை என்று **VUCA** – ஐ கூறலாம்.

13. **தனியார்மயமாக்கல் என்றால் என்ன?** பொதுத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை தனியார் துறைக்கு மாற்ற அனுமதி அளிப்பதாகும்.

14. **வரு நிகழ்சரக்கு சரக்கு:** இது ஒரு வகை எதிர்கால சரக்கு ஆகும். இது விற்பவர் கைவசம் வந்து சேர்வது, எதிர்காலத்தில் நடக்கும், நிகழ்ச்சியைப் பொறுத்தது.

15. **மாற்றுமுறை ஆவணம்:** கே.சி. வில்ஸ் என்பவரின் கருத்துப்படி ஒருவர் நன்னம்பிக்கையில் மற்றும் மறுபயன் கருதி தான் யாரிடமிருந்து பெற்றாரோ அவரின் உரிமையில் பழுது இருந்த போதிலும் எந்த முறை ஆவணத்தின் மீதான உரிமையைபெறுகிறாரோ அந்த ஆவணமே மாற்றுமறைஆவணம் ஆகும்.

16. **தொழில் முனைவோரின் மேலாண்மை பணிகளை பட்டியலிடுக**. திட்டம் தீட்டல், அமைப்பு பணி, கட்டளையிடுதல், கட்டுபாடு காத்தல், ஒருங்கிணைப்பு

17. மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881 பிரிவு 15 **மேலெழுதுதல்** என்பதற்கு இலக்கணம் தருகிறது.

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X3=15**

18. **தேசிய ஆணையத்தின் உறுப்பினர்கள் பற்றி விவரி.** 5 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர். அவர்களில் ஒருவர் நீதித்துறையை சார்ந்தவராக இருக்க வேண்டும்.
ஏனைய நபர்கள் பிற துறைகளில் இருக்க வேண்டும்.
இவ்வமைப்பில் பெண் உறுப்பினர் இருக்க வேண்டும்.

19. **தொழில் நுட்ப சூழலை விளக்குக.** கடந்த காலங்களில் தொழில் நுட்பத்தின் விரைவான வளர்ச்சி அனைத்து வியாபாரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொலைத் தொடர்பின் வளர்ச்சி உலகளவில் சந்தைகளில் உருவாக்கியுள்ளது. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நுகர்வோரின் தேவையைக் கண்டறிய முடிகிறது.

20. **உலகமயமாக்கலின் ஏதேனும் மூன்று தாக்கங்கள்:** பன்னாட்டு நிறுவனங்கள் பொருட்களை தயாரிக்க, வாங்க மற்றும் பொருட்களை விற்பனை செய்ய முடிகிறது. நுகர்வோர் பொருட்களின் சந்தையை வெகுவாக பெருக்கிட உதவும் வாய்ப்பை உருவாக்கலாம். வெளிநாட்டு நிறுவனங்களின் வருகை உள்நாட்டு பொருளாதார வளர்ச்சியையும் வேலை வாய்ப்பையும் உருவாக்கி வழி கோலலாம்.

21. **தற்போதைய / இருக்கின்ற சரக்கு:** ஒப்பந்தம் செய்யும் போது விற்பனையாளரின் கைவசம் உள்ள சரக்கு இருக்கின்ற சரக்கு ஆகும். விற்பனை செய்ய முகவரின் வசம் ஒப்படைக்கப்பட்ட சரக்கும், அடமானம் பெற்றவர் விற்கும் அடமான சொத்தும் உள்ளடங்கும்.

22.






Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| 23. தொழில் முனைவோர் | மேலாளர் |
|---|---|
| தொழிலை தொடங்குபவர் | தொழிலில் பணிபுரிபவர் |
| உரிமையளார் | உழைப்பாளி |
| இலாபம் பெறுபவர் | ஊதியம் பெறுபவர் |

24. தனியார்மயமாக்களுக்கு பிறகு பொதுத்துறையின் கைவசம் உள்ள தொழில் நிறுவனங்களின் பெயர்கள்: **அணுசக்தி, பாதுகாப்பு, மின்சாரம், இரயில்வே**

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 2X5=10**

**25.அ. மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவாதிக்க.**

**நிதிப்பிரச்சனை:-** மகளிர் தொழில் முனைவோர்களுக்கு தங்களின் தொழிலில் ஏற்படும் நிதிப்பற்றாக்குறையை சமாளிப்பது மிகப்பெரிய சவாலாக உள்ளது.

**ஆதரவு இன்மை:-** கணவன், பிள்ளைகள், பெற்றோர்கள், நண்பர்கள் அருகில் வசிப்பவர்கள் என பலரின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

**கடும் போட்டி:-** மகளிர் தொழில் முனைவோர்கள் தொழில் கடுமையான போட்டியை எதிர் கொள்கின்றனர்.

**கல்வியறிவு இன்மை:-** குறைவாக படித்துள்ள மகளிர் தொழில் முனைவோர்கள் தொழில் தொடர்பான கருத்துக்களை முழுவதுமாக புரிந்து கொள்ள முடியவில்லை.

**சார்ந்து வாழும் கலாச்சாரம்:-** பல சம்பவங்களில் மகளிர் தன் வாழ்நாள் முழுவதும் நம் நாட்டில் பிறரை சார்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

**25.ஆ. LPG- யின் சிறப்பு அம்சங்கள்:**

புதிய வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்தங்களை அறிமுகம் செய்வது.

வணிகக் கட்டுப்பாடுகளை அகற்றுதல்.

பல்வேறு பொருள்களுக்கு புதிய சந்தை வாய்ப்பை உருவாக்கியது.

வெளிநாட்டு நேரடி முதலீட்டை உருவாக்குகிறது.

நுகர்வோர் பொருட்களின் சந்தையை பெருக்கிட உதவியது.

**26.அ.**

| அடிப்படை | நிபந்தனை | நம்புறுதி |
|---|---|---|
| பொருள் | இது ஒப்பந்தத்தின் கருப்பொருளாகும் | இது ஒப்பந்தத்தின் துணையாகும். |
| முக்கியத் துவம் | ஒப்பந்தத்தில் நிபந்தனையை மீறுவது ஒப்பந்தத்தையே மீறுவதாகக் கருதப்படும். | நம்புறுதியை மீறுவது ஒப்பந்தத்தின் மீறுவது ஆகாது. |
| உரிமை மாற்றம் | நிபந்தனை நிறைவேற்றாமல் உரிமை மாற்றம் நிகழ முடியாது. | நம்புறுதியை நிறைவேற்றாமல் உரிமை மாற்றம் நிகழலாம். |
| தீர்வு | நிபந்தனையை மீறினால் ஒப்பநதத்தால் பாதிக்கப்பட்ட நபர் ஒப்பந்தத்தை நீக்கிக் கொள்வதுடன் நட்டஈடு கோரும் உரிமையைப் பெறுகிறார். | நம்புறுதியை மீறுவதனால் ஒப்பந்தத்தில் பாதிக்கப்பட்டவர் நட்ட ஈடு கேட்கும் உரிமையை மட்டுமே பெற்றுள்ளார். |

**26.ஆ. நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் தெரிவிக்கும் போது புகார் மனுவில் தரப்படவேண்டிய விவரங்கள்:**

புகார் அளிப்பவரின் பெயர் முகவரி

1. புகார் அளிக்கும் எதிர்தரப்பினரின் பெயர் முகவரி
2. வாங்கிய பொருள் அல்லது பயன்படுத்திய சேவையின் நாள்
3. வாங்கிய பொருள் அல்லது சேவையின் மதிப்பு
4. வாங்கிய பொருள் அல்லது சேவையின் முழுவிவரம்
5. புகார் பற்றிய விவரம் அதாவது வணிக பழக்கங்களுக்கு புறம்பபான செயல்பபாடுகள் அல்லது பொருள் அல்லது சேவையில் உள்ள பழுதா அல்லது மிகையாக செலுத்தப்பட்ட விலையா என தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும்.
6. வாங்கிய பொருள் அல்லது சேவை தொடர்பாக வழங்கப்பட்ட ரொக்கம் அல்லது கடன் இரசீது



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com